1981 ஏப்ரல் 3]

அ. கோவை நகரில் ரேஷன் கடைகளில் கோதுமை கொடுக்கப் பெறாதது.

"கோவை நகரத்தில் ரேஷன் கடைகளில் மக்களுக்கு கோதுமை கிடைக்காமலும், ஏதாவது ஒரு சமயத்தில் கிடைத்தாலும் ஒரு குடும்ப கார்டுக்கு இரண்டு கிலோ மட்டுமே கொடுக்கப்படுவதாலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு மக்கள் மத்தியில் தோன்றியுள்ள பதட்ட நிலை"பற்றி திருவாளர்கள் கே. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் ரேஷன் கடைகளில் மக்களுக்கு கோதுமை கிடைக்காமலும், ஏதாவது ஒரு சமயத்தில் கிடைத்தாலும் ஒரு குடும்ப கார்டுக்கு இரண்டு கிலோ மட்டுமே கொடுக்கப்படுவதாலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டு மக்கள் மத்தியில் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோதுமை விளைவது இல்லை. தமிழ்நாட்டின் நுகர்வோர்களின் தேவையை பொது விநியோக முறையின்கீழ் நிறைவு செய்வதற்கென மைய அரசு மாதந்தோறும் 3,000 டன்கள் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. இந்த 3,000 டன்கள் கோதுமையும் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் நுகர்வோர்களுக்கு குடும்ப அட்டைகளின்மூலம் வழங்கப்படுவதற்கென பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடந்த 3 மாதங்களில் கோவை நகரத்துக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட கோதுமையின் அளவு முறையை மாதம் ஒன்றுக்கு 130 டன்கள். இந்த கோதுமை குடும்ப அட்டை ஒன்றுக்கு 2 கிலோ முதல் கிலோ வரை என்ற அளவில் மாதந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கோவை நகரத்தில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை சுமார் 1.00 இலட்சத்துக்கு மேலாகும். அட்டை ஒன்றுக்கு 2 கிலோ என்று கணக்கிட்டாலும் மொத்த தேவை மாதம் ஒன்றுக்கு 200 டன்களுக்கு மேலாகும். நம் மாநிலத்துக்கு ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையின் குறைந்த அளவைப்பொறுத்து பல்வேறு மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டு வருகிறது. தேவையைவிட மிகவும் குறைவாக ஒதுக்கீடு உள்ளதால் தான், தேவைப்பட்ட அளவிற்கு கோதுமை வழங்க முடிவ

தில்லை. மைய அரசை பல கட்டங்களிலும் இவ்வரசு கூடுதல் ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்துக்கொண்டுள்ளது. இருப்பினும் குறைந்த அளவு கோதுமையே ஒதுக்கீடாக கிடைத்து வருகிறது. அதிக அளவு கோதுமை ஒதுக்கீடு வந்தாலொழிய நுகர்வோர் எல்லோரின் தேவையையும் நிறைவு செய்ய இயலாது. இருப்பதை வைத்துக்கொண்டு இந்த அரசு விநியோகம் செய்து வருகிறது.

[முற்பகல் 11-50]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : ஏற்கெனவே மத்திய சர்க்காருடைய கோதுமை ஒதுக்கீடு போதுமானதாக இல்லை மீண்டும் கேட்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழ் நாட்டிலே வறட்சியின் காரணமாக, விளைவின்மை காரணமாக, அரிசித் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டு இருக்கிற இந்தச் சூழ்நிலையில் மேலும் இதைச் சுட்டிக்காட்டி அதிக அளவுக்குக் கோதுமை அனுப்பப்படவேண்டுமென்று வற்புறுத்தி அதிக கோதுமையைப் பெற்று விநியோகம் செய்ய அரசுமுன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போன்று உணவுப் பற்றாக் குறை ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலையில் அதிகமான அளவுக்கு கோதுமையை வாங்குகிற பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இப்போது அளிக்கப்படுகின்ற இந்த 3 ஆயிரம் டன்னை வைத்துக்கொண்டு போதுமான அளவுக்கு விநியோகம் செய்ய முடியாது. தேவைப்படுகிற அளவுக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் 10 ஆயிரம் டன்னாவது கொடுத்தால்தான் ஓரளவுக்கு தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்று மத்திய அரசுக்கு சில நாட்களுக்கு முன்னாலே கூட எழுதியிருக்கிறோம். ஆனால் அவர்கள் வட பகுதியிலே உள்ளவர்களுக்கு கோதுமையின் தேவை அதிகமாக இருப்பதன் காரணமாக பற்றாக் குறை என்று சொல்கிறார்கள். நமக்கு அரிசிதான், தேவையென்றாலும்கூட கோதுமையை புழங்குகிறவர்கள் இருக்கிறார்கள், ஆகவே ஓரளவுக்கு அதிகமாகத் தரவேண்டுமென்ற முறையிலே தான் 10 ஆயிரம் டன் வழங்கவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம். மேலும் மேலும் வற்புறுத்துவதற்கு இந்த அரசு முன்வரும்.

திரு. என். வரதராஜன் : கோதுமை போதுமான அளவுக்கு மத்திய அரசின் கையிருப்பில் இருக்கிறது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் ஏராளமான கையிருப்பு இருக்கிறது என்ற தகவல் வருகிறது. தமிழ்நாட்டில் கோதுமையைக் கொண்டு உற்பத்தி செய்கிற மாவு ஆலைகள், கோதுமை மாவு, ரவை, ஆட்டா மாவு இவைகளை உற்பத்தி செய்கிற ஆலைகள் போதுமான கோட்டா கொடுக்கப்படாத காரணத்தால் முடங்

கிடக்கின்றன, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், தமிழ்நாட்டில் வறட்சி இருக்கிறது, இவ்வளவையும் கொண்டு மாநில அரசு கேட்கும்படியான 10 ஆயிரம் டன்னையாவது கொடுக்கவேண்டுமென்று உடனடியாக மத்திய அரசை வற்புறுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி முதலிலேயே எழுதினோம். இப்போது 2, 3 நாட்களுக்கு முன்னாலே கூட வற்புறுத்தி எழுதியிருக்கிறோம். அரவையாலைகளுக்குப் பயன்படுகின்ற வகையில் 5, 6 மாதங்களுக்கு 65 ஆயிரம் டன் என்று அனுப்பிக்கொண்ருந்தார்கள். இப்போது அதையும் 30 ஆயிரம் டன்களாகக் குறைத்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று ரவை, மைதா போன்றவை உற்பத்தியில் இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறது, அதிகமாக அளிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். குறைந்த அளவு 40 ஆயிரம் டன்னாவது கொடுத்தால்தான் ஓரளவுக்கு தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்று சொல்லி அதிகமாகக் கேட்டிருக்கிறோம். பொது விநியோகத்திற்கு 3 ஆயிரம் டன் போதாது, 10 ஆயிரம் டன்னாவது தரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் அரிசி உணவை தான் முக்கியமாகச் சாப்பிடுகிறார்கள். அதனால் அதிகமானவர்கள் நீரிழிவு வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். அந்த வியாதிக்கு தகுந்த உணவு கோதுமைதான். ஆகவே மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பை தான் முதலிலே தெரிவித்தேன். 3 ஆயிரம் கொடுக்கிறார்கள், அது போதாது, 10 ஆயிரம் டன்னாவது கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவருகிறோம். மீண்டும் மீண்டும் வற்புறுத்துவோம்.

ஆ. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தில் பல பதவிகள் நிரப்பப் பெறாமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் பல மாதங்களாக, ஒருங்கிணைப்பு ஆசிரியர் பதவி, பாடநூல் தயாரிப்பாளர், உதவியாளர், பதவி, கண்கணிப்பாளர் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பது குறித்தும், அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்